சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.99/2018

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: திருமதி. ஆர்த்தி | த/பெ: ராதாகிருஷ்ணன் |
| | க/பெ : யுவராஜ் |
| வயது: | ஊர் : |
| தொழில்: | அலைபேசி எண்: |
| தேதி: 26.11.2024 | முகவரி: |

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் திருச்சியில் உள்ள Gift of Sight என்ற தனியார் கண் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் நீலக்குடி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தானது நீர்க்குடி கிராமத்தில் உள்ளதாக நான் தாவா வழக்குரையில் சொன்ன விவரம் தவறுதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 20.5 ஏர்ஸ். அதன் நான்கெல்லைகள் என்னவென்றால் கிழக்கே கணேசன் நிலம், மேற்கே காட்டூர் எல்லை வடிகால் வாய்க்கால், வடக்கே தெட்சிணாமூர்த்தி நிலம், தெற்கே ரெங்கராஜன் நிலம். வடக்கே உள்ள தெட்சிணாமூர்த்தியின் சர்வே எண் என்னவென்றால் அது

எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு எப்படி கிடைத்தது என்றால் அரசாங்கம் கொடுத்தது. அரசு என் அப்பாவிற்கு வழங்கப்பட்டது என்பதை காட்ட பட்டா ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் பட்டா எத்தனையாவது ஆவணமாக இந்த தாவாவில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வா.சா.ஆ.2. அந்த ஆவணமானது என் அப்பா பெயரில் வழங்கப்பட்ட தனிப்பட்டா அல்ல என்றும், அது கிராமநிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட கிராம அடங்கல் கணக்கின் உண்மை நகல் என்று சொன்னால் சரிதான். அரசாங்கம் என் அப்பாவிற்கு பட்டா மூலம் தாவா சொத்தை ஒப்படைக்கப்பட்டது என்பதை காட்ட அதற்கான பட்டாவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்குரையில் 1980 ஆம் ஆண்டு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் மிகை நிலத்தை எனது அப்பாவிற்கு அரசு வழங்கியது என்பதை காட்ட அதற்கான பட்டா, Assignment order ஆகியவைகளை நான் இந்த தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தினை எனது அப்பா எனக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிவைத்ததாக சொல்லி நான் வா.சா.ஆ.9 ஆன தான செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்திலாவது தாவா சொத்து அவருக்கு 1980 ஆம் வருடம் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் மிகை நிலத்தை அரசால் வழங்கப்பட்டது என்று ஏதாவது வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து வா.சா.ஆ.9 ஆன தான

செட்டில்மெண்ட்டை எனக்கு எழுதிக்கொடுக்க எனது அப்பாவிற்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. பட்டாவின் அடிப்படையில் வா.சா.ஆ.9 ஆன தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்று நான் விளம்புகை பரிகாரம் கோருவது ஏற்புடையதில்லை என்றும், அதனால் நான் கோரும் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆன சாகுபடி அடங்கல் கணக்கானது எந்த கிராம நிர்வாக அலுவலரிடம் நான் பெற்றேன் என்றால் அதை நான் பெறவில்லை, என் அப்பா தாவா சொத்தில் விவசாயம் செய்த போது நீலக்குடி அலுவலரிடம் பெற்றார். வா.சா.ஆ.6 ஆன சாகுபடி அடங்கல் கணக்கு எனது அப்பா விவசாயம் செய்ததாக சொல்லப்படும் சொத்தின் விஸ்தீரணம் 20 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 ஆன சாகுபடி அடங்கல் கணக்கானது உரிய கிராம நிர்வாக அலுவலரிடம் பெறவில்லை என்பதால்தான், தவறான பசலி வருடமும், விஸ்தீரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1980 ஆம் வருடத்திலிருந்தே 2017 ஆம் வருடம் வரை தாவா சொத்தினை எனது அப்பா தொடர்ச்சியாக விவசாயம் செய்து அனுபவித்துவந்தார் என்பதை காட்ட நான் விவசாய பயிர் காப்பீட்டுக்கான ஆவணங்களையோ, சிட்டா அடங்கல் மற்றும் விவசாய கடன் பெற்றதற்கான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், என் அப்பா விவசாய கடன் பெறவில்லை. 2015 க்கான சிட்டா அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா தாவா சொத்திற்கு நேரடியாக

சென்று விவசாயம் செய்துவந்தாரா என்றால் ஆமாம், சிறுபிள்ளையாக இருந்தபோது அவருடன் நானும் சென்றுள்ளேன். என் தந்தையார் எந்தக்காலத்திலும் தாவா சொத்தில் விவசாயம் செய்தது கிடையாது என்றும், அவருக்கு இரண்டு கண்பார்வையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிற்கு மாலை 5 மணிக்கு மேல் தான் கண் பார்வை சரியாக தெரியாது. அவருக்கு இருந்தது மாலைக்கண் நோய்தான். எனது அப்பாவிற்கு பல ஆண்டுகளாக கண்பார்வை குறைபாடு உள்ளது என்றும், அவர் எந்தக்காலத்திலும் தாவா சொத்திற்கு சென்று விவசாயம் செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் அடிப்படையில் வரும் 07.12.2024 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.11.26 14:46:12 +0530